**செ.வெ.எண்: 36** **நாள்: 18.02.2021**

# கரூர் மாவட்டம்

## கால்நடை பராமரிப்புத்துறையின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில்முனைவோர், தனியார் மற்றும் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் திருமதி.சு.மலர்விழி இ.ஆ.ப. அவர்கள் தகவல்

கரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தனியார் நிறுவனங்கள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில்முனைவோர் மற்றும் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பால், இறைச்சி மற்றும் தீவன உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டுதல் மற்றும் செயலாக்க அலகுகள் அமைத்திடவும், தொழில் விரிவாக்கம் செய்திடவும் நிதி உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்படாத பால், இறைச்சி மற்றும் தீவன பதப்படுத்தும் துறைகளை ஒழுங்கமைக்கப்பட்ட துறையாக மாற்றுவதே இதன் நோக்கம். இதனால் தயாரிப்புகளுக்கு கூடுதல் மதிப்பீடு, வாடிக்கையாளர்களுக்கு சுத்தமான மற்றும் சுகாதாரமான பால், இறைச்சியை வழங்கவும், தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் பங்கேற்க செய்வதன் மூலம் தொழில் முனைவோர் மேம்படவும் மற்றும் மலிவான தரமான உணவை மக்களுக்கு கிடைக்க செய்ய முடியும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனைவோர், தனியார் மற்றும் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள முறையான திட்ட மதிப்பீட்டறிக்கையுடன் (Project Proposal) விண்ணப்பித்திட தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதியின் அடிப்படையில் மொத்த திட்ட மதிப்பீட்டில் 90% வரை வங்கி கடன் பெறும் வசதி உள்ளது. இத்திட்டத்தில் நிறுவனங்களின் பங்களிப்பு தொகையான சிறு குறு நடுத்தர நிறுவனங்களாக இருப்பின் 10% முதல் 15% வரை மற்றும் இதர நிறுவனங்களுக்கு 25% வரை ஆகும்.

எனவே, இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள நிறுவனம் உதய மித்ரா போர்டல் (Udaya Mitra Portal by Small industries Development Bank of India – SIDBI) மூலம் இந்தியாவின் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கிகளுக்கு தங்கள் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**